வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க. எண். 4974 /ஆ4/2024 நாள் : 08.08.2024

பொருள்: பள்ளிக்கல்வி –திட்ட ஆண்டு 2023–2024 மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் –தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி பதிப்பு உதவித்தொகைத் தேர்வில் (National Means –Cum –Merit Scholarship) தேர்ச்சி பெற்று NMMSS கல்வி உதவித்தொகை பெறத் தகுதியான மாணவ /மாணவியரின் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் National Scholarship Portal இணையதளத்தில் புதிதாக பதிவேற்றம் மற்றும் Renewal செய்யும் பணிகளை 14 ஆகஸ்ட் 2024 –க்குள் முழுமையாக முடித்தல் –சார்பு

பார்வை: 1.மத்திய கல்வி அமைச்சகத்தின் 24.06.2024 ஆம் நாளிட்ட கடிதம்
2.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(நாட்டு நலப்பணி திட்டம்) அவர்களின் அறிவுரைகள் நாள் 07.08.2024

========

பார்வையில் கண்ட கடித்திற்கு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடந்த 2023 –24 ஆம் கல்வியாண்டில் NMMS தேர்வில் தேர்ச்சி பெற்று, இக்கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியரின் விவரங்கள் National Scholarship Portal இல் கல்வி NMMS உதவித்தொகை பெறுவதற்காக ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இப்பணியை 14 ஆகஸ்ட் 2024 –க்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

2023 – 2024 ஆம் ஆண்டிற்கான NMMS தேர்வில் தேர்ச்சி பெற்று உதவித் தொகை பெறத் தகுதியான மாணவ மாணவியரின் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

இதே போன்று, கடந்த 3 ஆண்டுகளில் NMMS உதவித்தொகை பெற்றுவரும் அதாவது இந்த கல்வியாண்டில் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பில் படித்துவரும் NMMS உதவித்தொகைக்கு தகுதி பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களை National Scholarship Portal–ல் உதவித் தொகைக்காக செய்யும் பணியையும் 14 ஆகஸ்ட் 2024 –க்குள் முடிக்குமாறு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் NMMS தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகள் தங்கள் இடைநிலைக் கல்வியையும் மேல்நிலைக் கல்வியையும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மட்டுமே தொடரவேண்டும் எனவும் மத்திய அரசின் மற்ற எந்த உதவித் தொகையையும் பெறுபவராக இருக்க கூடாது எனவும் தகுதியுள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கு அறிவுறுத்துமாறு அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

2. இதனுடன், ஒரு பள்ளியிலிருந்து வேறொரு பள்ளியில் சேரும் மற்றும் ஒரு மாவட்டத்தின் பள்ளியிலிருந்து வேறொரு மாவட்ட பள்ளியில் சேரும் NMMS உதவித்தொகைக்குத் தகுதியுடைய மாணவ / மணவியரின் விவரம் பழைய பள்ளிகளிலிருந்து புதிய பள்ளிக்கு தெரியப்படுத்தப்படவேண்டும். இதனால், உதவித்தொகைக்கு தொடர்ந்து ( இடைநிலை நிறுத்தப்படாமல் ) விண்ணபித்து / புதுப்பித்து பெற ஏதுவாக அமையும்.
3. மேலும் NMMS உதவித்தொகை பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தகுதியிருந்தும் உரிய காலத்திற்குள் முறையாக விண்ணப்பிக்காததால் உதவித்தொகை கிடைக்கப் பெறாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க செயலாகும். எனவே, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களையும், இது சார்ந்து அவரவர் பள்ளியில் பயிலும் உதவித் NMMS தொகை பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை Renewal applications முடித்துவிட்டனரா என்பதை உறுதி செய்து கொள்ளவும் பள்ளியளவிலான Institution Verification –ஐ எவ்வித சுணக்கமும் இல்லாமல் முடித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. இப்பணி குறித்து இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் பெறப்பட்டால், அப்பள்ளித்தலைமையாசிரியர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் என்பதை திட்ட வட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

**// இது மிக மிக அவரசப் பணி // தனிக்கவனம்//**

இணைப்பு:

1. Fresh Application student list
2. Renewal Application student List
3. OTR பதிவேற்றும் முறை மற்றும்
   Renewal பதிவேற்றும் முறை

// ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து அரசு/அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்ககக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.